கோயிலிலே எழுதிவைப்பது என்பது பொருத்தமாக இருக்காது. ஆனாலும் கூட அதிலிருந்து குறிப்பிடத்தக்க வரிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அந்தக் கோயில்களில் பொறிக்கப்படும் என்று இதே அவையிலே நான் ஏற்கெனவே உறுதி அளித்து இருக்கின்றேன். அது நிறைவேற்றப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 439, திரு. எஸ். எஸ். மணி நாடார், மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர்.

439—

பதனீர் குளிரூட்டும் நிலையம் அமைத்தல்

***11477—திரு. எஸ். எஸ். மணி நாடார்:**

மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சாத்தான்குளம் தொகுதியில் பதனீர் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு, கதர்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். எஸ். மணி நாடார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய சாத்தான்குளம் தொகுதியில் அதிகமான பனை மரங்கள் இருக்கின்றன. அங்கே மரம் ஏறும் தொழிலாளர்கள் சுமார் 10 ஆயிரம் பேர்கள் இந்தத் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்தத் தொழில் சுமார் 4 மாத காலம்தான் நடக்கின்றது. அதிகமான பெண்கள் இந்தத் தொழிலில் ஈடுபடுகிறார்கள். அவர்கள் கற்கண்டு செய்து நல்ல லாபம் ஈட்டுகிறார்கள். ஆகவே, இந்தத் தொழிலை வருடம் முழுவதும் செய்வதற்கு ஏற்றவகையில்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் வினாவைச் சுருக்கமாக எழுதி வைக்க வேண்டும்.

திரு. எஸ். எஸ். மணி நாடார்: மையப் பகுதியான பேய்க்குளத்தில் குளிரூட்டும் நிலையம் அமைத்துத் தருமாறும், அவ்வகையில் ஏழை எளிய மக்களை வாழ வைப்பதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா என்றும் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு: பேரவைத் தலைவர் அவர்களே, பதனீர் ஒரு பருவகால உற்பத்தி உண்பொருளாகும். இது, தொழிலாளர்களால் மரத்திலிருந்து இறக்கப்பட்டதும், பனை

1998 மே 5]

வெல்லமாகவோ, பாகாகவோ, பனைச் சர்க்கரையாகவோ, கற்கண்டாகவோ உற்பத்தி செய்யப்பட பயன்படுத்தப்படுகிறது. இந்தப் பதனீர் குளிரூட்டப்பட வேண்டியதில்லை. சென்னை போன்ற அதிகமான அளவில் பதனீர் விற்பனை வாய்ப்புகள் உள்ள நகரங்களில்தான், பதனீர் குளிரூட்டும் நிலையம் அமைத்து விற்பனை செய்யப்படுகின்றது. ஆனால், சாத்தான்குளம் போன்ற பகுதிகளில், பதனீர் குளிரூட்டும் நிலையம் அமைத்து, விற்பனை செய்கின்ற அளவிற்கு வாய்ப்புகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ். டேவிட் செல்வின்.

திரு. எஸ். டேவிட் செல்வின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல, தென் மாவட்டங்களிலே பனை ஏறும் தொழிலாளர்கள் அதிகமாக இருக்கிறார்கள். அவர்கள் மிகவும் கடினமான தொழிலைச் செய்து பதனீர் மூலம் கிடைக்கக்கூடிய கருப்பட்டி, கற்கண்டுகளை உற்பத்தி செய்தாலும், அதற்குச் சரியான விலை கிடைப்பதில்லை. அவர்கள் உழைக்கின்ற அளவிற்கு, அவர்களுக்கான கூலி கிடைப்பதில்லை. எனவே, அரசு நெல் கொள்முதல் நிலையங்கள் அமைத்துத் தருவதுபோல், இந்தத் கருப்பட்டிக்கும், அரசு கொள்முதல் நிலையம் அமைப்பதற்கும், அவர்களுக்குரிய கூலி கிடைப்பதற்கும் ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பனைத் தொழிலாளர்கள் உற்பத்தி செய்கின்ற பனைச் சர்க்கரை, கருப்பட்டி, கற்கண்டு போன்ற பொருட்கள், கதர் வாரியத்தினுடைய அலகுகளில் விற்பனை செய்வதற்கு என கொள்முதல் செய்யப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது சாத்தான்குளம் தொகுதி பற்றிய கேள்வி. டாக்டர் தே. குமாரதாஸ்.

டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய இந்த ஏழை எளிய பனை ஏறும் தொழிலாளர்களுடைய வாழ்விலே ஏற்றம் வருகின்ற முகத்தான், பல நல்ல திட்டங்களை அறிவிக்க வேண்டும் என்பதற்காக கடந்த ஆட்சியிலே நான் வலியுறுத்திய நேரத்தில், பனைத் தொழிலாளர்களுக்குத் தனி வாரியம் அமைக்கப்படும் என்று பழைய

[1998 மே 5

முதலமைச்சர் இந்த அவையிலே உத்தரவாதம் கொடுத்திருந்தார்கள். அதற்கு ஏற்ப, அரசு ஏதாவது திட்டம் போட்டு, பனை வாரியம் அமைப்பதற்கான முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றதா? அதற்காகப் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறதா? இல்லை என்றால், இந்த அரசு முனைப்புடன் செயல்பட்டு, பனைத் தொழிலாளர்களுக்குத் தனி வாரியம் அமைக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சிக் காலத்திலே, ஒரு வாரியம் உருவாக்கப்பட வேண்டும் என்ற எண்ணத்தோடு இந்த வாரியத்தை உருவாக்கினார்களே தவிர, அதற்குண்டான திட்ட மதிப்பீடுகள் செய்து, அதைச் செயல்படுத்துவதற்குண்டான அலுவலர்கள் சரியான முறையில் நியமிக்கப்படவில்லை. ஆனால், கழக அரசு வந்ததற்குப் பிறகு, மும்பை கதர் ஆணைக் குழுவிலிருந்து பெறப்பட்ட ரூபாய் 1 கோடி நிதி உதவியை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அளித்து, இன்றைக்கு நல்ல முறையிலே அதைச் செயல்படுத்துவதற்குண்டான ஆர்வம் உள்ள அலுவலர்களைப் போட்டு, இப்போது அது செயல்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 440, திரு. செங்கை சிவம், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர்.

440—

மீன் வளம் குறைவதைத் தடுத்தல்

***10906—திரு. செங்கை சிவம்:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தொழிற்சாலைகளிலிருந்து வெளிவரும் கழிவுநீர் கடலில் கலப்பதால் மீன் வளம் குறைவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தொழிற்சாலைகளிலிருந்து வெளிவரும் கழிவுநீர் கடலில் கலப்பதால் மீன் வளம் குறைவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS